20.02.2026 O.S. 387/2019 பி.வா.சா 1 சண்முகையா பாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு சம்பந்தமான முழுவிபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பேச்சிமுத்து என்ற சிங்கத்துரை என் அப்பா. என் அப்பாவிற்காக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்யகூடாது என்றும், வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து என்பது அச்சன்புதூர் கிராமம் 10 வது வார்டு 1 வது தெரு, புதுவார்டு 2 வது வார்டு, 2 வது தெருவில் புஞ்சை மனை சர்வே எண்.16/1/131 பி2 சி1 சி2–வில் உள்ள 10 செண்டு மனையில் புதிய சர்வே எண்.16/1/131 பி–க்கு புல எண். 585/19 ல் 3 செண்டு என்றால் சரியல்ல. 585/19 ல் 7–1/2 செண்டு வாதிக்குரியதாகும். புல எண். 585/19 ல் 3 செண்டுக்கு மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 7–1/2 செண்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து மொத்தம் சேர்த்து 8 செண்டுஇடம் என்றால் சரியல்ல. 8 செண்டு இடத்தை ராமலிங்கமும், அவரது சகோதரர் சுப்பிரமணியனும் சேர்ந்து தலா 4 செண்டு வீதம்பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. ராமலிங்கத்திற்கு கிடைத்த 4 செண்டு இடத்தை அவரது வாரிசுகளான முத்துசாமியும், செல்லமுத்துவும் தலா 2 செண்டுகள் வீதம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. செல்லமுத்துவிற்கு கிடைத்த 2 செண்ட் இடத்தை பொறுத்து 1941 ம் ஆண்டு சிதம்பரம் மகன் சங்கரபாண்டியனுக்கும், அவரது மனைவி சுப்பம்மாளுக்கும் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த கிரையம் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சங்கரபாண்டியனும், சுப்பம்மாளும் சேர்ந்து கடந்த 1942ம் ஆண்டு கிரையம் பெற்ற 2 செண்டு இடத்தை சுப்பிரமணியன் மனைவி சிதம்பர வடிவம்மாளுக்கு வா.சா.ஆ 2ன் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சிதம்பரவடிவம்மாள் கணவர் பெயர் சுப்பிரமணியன் என்பது தெரியுமா என்றால் தெரியாது. சிதம்பரவடிவம்மாளுக்கு கிரையம் பெற்ற 2 செண்டையும், ஏறக்னவே சுப்பிரமணியனுக்கு பாகமாக கிடைத்த 4 செண்டையும் சேர்த்து மொத்தம் 6 செண்டை அனுபவம் செய்து வந்தார் என்றால்சரியல்ல. சுப்பிரமணியனுக்கு இரண்டு மனைவிகள் என்றும் முதல் மனைவி சிதம்பரவடிவம்மாளுக்கு குழந்தை இல்லாததால் 2வதுமனைவியான ராமயி மகனான முத்துசாமிக்கு 6 செண்ட் இடம் வாரிமையில் பாத்தியப்படடது என்றால் சரியல்ல. முத்துசாமிக்கு 2 மனைவி என்றும், அவரது முதல் மனைவியான சண்முகத்தாயும், 2வது மனைவியான கல்யாணி அம்மாளும் தலா 3 செண்டுகளை பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. கோமதியம்மாள் என்பவர் எனது பூட்டிஆவார். எனது பூட்டி கோமதியம்மாள் கல்யாணி அம்மாளிடம் இருந்து 1951ம் ஆண்டு சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் 4 செண்டை வாங்கியுள்ளார். 1951ம் ஆண்டு கிரையம் வாங்கிய ஆவணமானது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1951ம் ஆண்டு சண்முகத்தாய் மகன் சுப்பிரமணியன் என்பவரிடம் இருந்து வழக்கரின் தாத்தா சங்கிலி மாடப்பன் 3 செண்ட இடத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. பகுதி சொத்தை வாங்கியுள்ளார். அதை வா.சா.ஆ 3 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கிலி மாடப்பத்தேவருக்கு கிடைத்த 3 செண்ட் இடத்தையும் , வேறு சொத்துக்களையும் சேர்த்து அவரது மகன் சுப்பிரமணியன்

என்பவருடன் சேர்ந்து பாக பிரிவினை 1958 ம் ஆண்டு ஏற்பட்டு வாதியின் அப்பா சுப்பிரமணியனுக்கு வழக்கு சொத்து கிடைத்தது என்றால் சரிதான். அவ்வாறு பெற்ற சொத்தை சுப்பிரமணியன் இந்த வாதிக்கு கடந்த 2009 ம் ஆண்டு ஏற்பாட்டு ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ 4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துசம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு என் அப்பா மீது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் முடிவில் காவல்துறையினர் இருதரப்பினரும் எவ்வித கட்டிடமும் கட்டகூடாது என அறிவுரை செய்தார்கள். சர்வே எண்.585/18 ல் 30.09.1985 ம் ஆண்டு எனது தகப்பனார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ராமலிங்கம் வாரிசுகளிடம் கிரையம் வாங்கியுள்ளார் . ராமலிங்கத்தின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சண்முகவேல் குமாரர் பேச்சுமுத்து என்பவர் எனது அப்பா ஆவார். என்னிடம் காட்டப்பட்ட ஆவணத்தில் 30.09.1985 ம் தேதி பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இறந்து போன ராமலிங்கம் குமாரர் முருகையா, முத்துசாமி, செல்லமுத்தையா, இளவர்கள் மாடப்பன், வள்ளிமயில், ஆறுமுகச்சாமி ஆகியோர்களிடம் இருந்து என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். முத்துசாமி மகன் தான் இறந்து போன ராமலிங்கம் என்றால் சரிதான். 30.09.,1985 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் நான்கு பக்க எல்கையாக சர்வே எண். 585/18 ல் செண்டு 2-1/2 க்கு மால் என்றும், குடவண்டி ஆசாரி மனைக்கும் வடக்கு, தங்கள் வீட்டிற்கும் கிழக்கு, தெருவிற்கும் தெற்கு, சுப்பையா தேவர் மனைக்கும் மேற்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பையா என்பவர் வாதியின் அப்பா ஆவார். ராமலிங்கம் என்பவரின் தாத்தா செல்லமுத்து என்பவர் சங்கரபாண்டி மற்றும் அவரது மனைவி

சுப்பம்மாளுக்கு 1941ம் ஆண்டு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தை அவர்களது வாரிசுகளிடம் மீண்டும் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியை இடைஞ்சல் செய்ய நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்த பிறகு அதில் கட்டிடம் கட்டி தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாதால் நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.